## மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம்-2017

மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 3409-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சார சபை மற்றும் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவர்களாக காணப்படுகின்றன. மின்சார விநியோகம் மற்றும் விநியோக முறைமைகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாகக் காணப்படுகின்றது. செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 23,069 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 160.20 மில்லியனானதுடன், அதில் ரூபா 16,560 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 115 மில்லியன் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் உத்தரவாதத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட வேண்டுமென இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்பதிகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப வைப்புக்கள், இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தினால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமான இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், சிவில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவோ அல்லது மீளாய்வாண்டின் போது அவற்றிக்கு எவ்வித செலவினங்களும் ஏற்பட்டிருக்கவில்லை. ரூபா 856.97 மில்லியன் கிரயமொன்றில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட வான்வழி கட்டு கடத்திக்கான (Aerial Bundle Conductor) உபகரணங்கள், மத்தியதர மின்னழுத்த மின்காப்புப் பொருட்கள் (Medium Voltage insulators), ரகூன் 36 கிலோவாற்றிக்கான பதற்ற தொகுப்பு (Tension Set for Racoan 36 kilowatt), கடத்திகள் மற்றும் கேபிள்கள் போன்ற சொத்துக்கள் இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டு இருப்புக்களின் கீழ் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது செயற்திட்ட கண்காணிப்பு செலவினங்களாக செலவிடப்பட்ட ரூபா 112 மில்லியன் தொகையொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் சிவில் நிர்மாண வேலைகளின் கீழ் காட்டப்பட்டது.

**2.2.2 சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியினால் வேண்டப்பட்டவாறு செயற்திட்ட வழிகாட்டும் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடுடன் தொடர்புடைய முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஏடீபீ | 115.00 | 16,560.00 | 22.17 | 3,321 | 2.28 | 344.62 |
| சீஈபீ | 45.20 | 6,508.80 | 7.20 | 1,077 | 0.74 | 112.02 |
| **மொத்தம்** | **160.20** | **23,068.80** | **29.37** | **4,399** | **3.02** | **456.64** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைளினை வெளிப்படுத்துகையில் தாழ்ந்தமட்ட செயலாற்றல் காரணமாக, 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,399 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீடுகளில், 10.30 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுகின்ற ரூபா 456.64 மில்லியன் தொகையொன்று மாத்திரம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மொத்த ஒதுக்கீட்டில் 14.8 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 24.30 மில்லியன் தொகையொன்று மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதித்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில், 1.84 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 3.02 மில்லியன் தொகையொன்று மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதிவரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், கடன் உடன்படிக்கை 2016 யூன் 30 அளவில் கைச்சாத்திடப்பட வேண்டுமென வேண்டப்பட்டதுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 செப்தம்பர் 30 அளவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென பட்டியற்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், கடன் உடன்படிக்கை 2016 திசெம்பர் 19 இல் மாத்திரம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2017 யூன் 29 இல் அமுலுக்கு வந்தது. அதன் விளைவாக, செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதங்களுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிகளின் பயன்படுத்துகை தொடர்ந்தும் மந்தமாக காணப்பட்டது.

**3.2 பௌதீக செயல்முன்னேற்றம்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், வடமாகாணத்திலுள்ள நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவின் தீவுகளில் தனிமைப்படுத்தப்பட்டு அமைந்தள்ள காற்று, சூரியசக்தி, வினைத்திறனான டீசல் மின்பிறப்பாக்கிகள் மற்றும் பெட்டரிகள் போன்ற பல்வேறுபட்ட மின்சக்தி வளங்களினூடாக கலப்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைமையின் ஸ்தாபிப்பு, நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் நம்பகத்தன்மையின் முன்னேற்றம், கிராமிய மின்மயமாக்கல் வலைப்பின்னல் விரிவாக்கம் மற்றும் விநியோக செயலாற்றல் கண்காணிப்பின் முன்னேற்றம் மற்றும் பன்னிப்பிட்டிய மற்றும் பியகமயில் காணப்படும் கம்பிச்சட்ட துணை மின்நிலையத்தின் முன்னேற்றங்கள் போன்ற 04 பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்படுத்துவதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், பட்டியல்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு நிச்சயப்படுத்தப்பட்ட பொறுப்புக்களுடன் சுட்டிக்காட்டாப்பட்ட நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளுடனான அகல்விரிவானதொரு விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் செயலாற்றல் அறிக்கைகளில், குறிப்பிடப்பட்ட 270.50 கிலோமீற்றரின் 33 கிலோ வாற்கள் லினக்ஸ் இரட்டை சுற்று வரிசை மீதான (33 Kilowatts Lynx double circuit line) ஆய்வுகள் பூர்த்தியடைந்திருந்த போதிலும், அவற்றின் மதிப்பாய்வு அறிக்கைகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, அவற்றின் நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தாரவொருவரை தெரிவுசெய்தவற்கு 2018 யூலை 31 வரையிலும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தூண்களின் (gantries) நிர்மாணத்திற்கான காணி கொள்வனவு வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் கோபுர இணைப்புக்களை இடுவதற்கான (lying of tower lines) அங்கீகாரம் சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை, வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் போன்றவற்றிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) கிராமிய மின்மயமாக்கல் வலையமைப்பிற்கான 02 ஒப்பந்தப் பொதிகளில், ரூபா 591.84 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் மீளாய்வாண்டின் போது வழங்குவதற்கு பட்டியல்படுத்தப்பட்ட ஒப்பந்தபொதியொன்று, விவரக்குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான மாற்றங்கள் காரணமாக, 2017 திசெம்பர் 31 வரையிலும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்த பெறுகைத்திட்டத்தின் பிரகாரம், 03 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் ரூபா 1,729.44 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் வழங்கப்பட்டிருந்த பெறுகை ஒப்பந்தங்கள் நிதியளிப்பு முகவரின் இணக்கப்பாடு மற்றும் பெறுகைக் குழுவின் அறிவுறுத்தல்களினைப் பெறுவதில் தாமதங்கள் போன்ற பல்வேறுபட்ட காரணங்கள் காரணமாக, 2017 திசெம்பர் 31 வரையிலும் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காணிகளின் அனுமதியில் தாமதங்கள் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய உள்ளுராட்சி சபைகளின் அங்கீகாரத்தினைப் பெறுவதில் தாமதங்கள் காரணமாக, 2017 திசெம்பர் 31 வரையிலும் வடமாகாணத்திலுள்ள அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவுகளில் கலப்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைமை நிர்மாணத்துடன் தொடர்புடைய ஒப்பந்தங்களினை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,865.36 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் வலுப்படுத்தும் கொங்கிறீட் மற்றும் முன்-அழுத்த கம்பங்கள், மீற்றர் இணைப்புக்கள், துரப்பிடிக்காத இரும்பு கடத்திகள், வான் தொகுப்பு கடத்தி (aerial bundle Conductor) மற்றும் உதிரிப்பாகங்கள் போன்ற வழங்கல் மற்றும் விநியோக மூலப்பொருட்களுக்கான ஒப்பந்தம் 2016 திசெம்பர் 26 இல் அளிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றிற்கு ரூபா 104.53 மில்லியன் முற்பணமொன்று செலுத்தப்பட்டது. 2017 திசெம்பர் 31 வரையிலும் மேற்குறித்த மூலப்பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், மூலப்பொருட்களின் விநியோகம் தொடர்பிலான தாமதமான செயலாற்றலுக்கான எவ்வித காரணங்களும் விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 சனவரியில் பிரசுரிக்கப்பட்ட கடனளிப்பு முகவரின் அறிக்கையின் பிரகாரம், கண்டி நகரத்திற்கான மின்சார விநியோகத்தின் நம்பகத்தன்மையினை முன்னேற்றுவதன் தேவை அழுத்திக் கூறப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் கூறு - 04 இன் கீழ் ஐ.அ.டொலர் 21.06 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முன்மொழிவு அமுல்படுத்தப்பட்டிருக்காததுடன் மேற்குறிப்பிடப்பட்ட ஐ.அ.டொலர் 20.43 மில்லியன் ஒதுக்கீடு பன்னிப்பிட்டிய மற்றும் பியகமயிலுள்ள மின்சார விநியோக உப நிலையங்களினை முன்னேற்றுவதற்கு மாற்றப்பட்டிருந்தது. அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மின்சார விநியோக உப நிலையங்களுக்கான நிர்மாண ஒப்பந்தங்கள் 2018 யூன் 31 வரையிலும் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் உறுப்புரைகளில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக, இலங்கை மின்சார சபையின் பதவியணியினர் உறுப்பினர்கள் சார்பில் மீளாய்வாண்டிற்கு செயற்திட்டத்தினால் ரூபா 3.76 மில்லியன் கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2016 யூன் 15 இன் டீஎம்ஏ/டீ/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், ஐ.அ.டொலர் 10 மில்லியன் மொத்த மதிப்பிடப்படட கிரயத்தினை விஞ்சுகின்ற நன்கொடை நிதியளிப்பு செயற்திட்டத்திற்கு உள்ளகக் கணக்காய்வாளரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மீதான முறையான கண்காணிப்பு பொறிமுறைமை ஸ்தாபிப்பினை மேற்கொள்ள உள்ளகக் கணக்காய்வாளரொருவரை ஆட்சேர்ப்புச்செய்வதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.